முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்
எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த
மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 10 திகதி முதல்
சுபகிருது வருடம் மார்கழி மாதம் 17 திகதி வரை
(25.12.2022 ஞாயிறு முதல் 01.01.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தவயோக ராஜனே தருமனே
   தரணி காத்திட ஆறுமுகனார்
   அவதாரமாக வந்த அரங்கனே
   அண்ணலே உமைபோற்றி இனிதே
2. இனிதே அகத்திய மகரிஷி யானும்
   இந்தியா தமிழகம் தன்னில்
   கனிவான சுபகிருது சிலை திங்கள்
   கணக்காய் தசதிகதி மேல் மூவையீர் திகதி வரை
3. வரை நடக்கும் வார நிகழ்வாக
   வருங்கால பலன்குறித்த ஆசிதனை
   உரைப்பேன் பாதுகாப்பு வேண்டி
   உயர்வான ஆளுமை சக்திகள்
4. சக்திகள் மக்களை நோக்கி
   சாமானியர் போல இறங்கி
   சக்திபட தயவான ஆட்சிதனை
   சகலரும் பயனுறும் வண்ணம்
5. வண்ணமுடன் ஆளுமை புரிய
   வரலாறு உள்ள காலமாக
   திண்ணமுடன் ஆளுமை சிறந்து
   தெய்வ அனுகூலமும் கூடிநிற்கும்
6. நிற்கவே நிலவுலகில் தருமஞான
   நீதிமான்கள் ஆட்சி என
   ஏற்புதனை இந்தியா தமிழகம் அடைய
   யுகமே இதன் வழிப்பயன் அடையும்
7. அடையவே ஆயிரம் பதவிகள்
   ஆளுமைகள் வகுத்து நின்றாலும்
   சடாட்சரன் வேலவனை வணங்கி
   சரணாகதி கொள்ளா ஆளுமை சிறக்காது
8. ஆதலால் தயவே வடிவான
   அரங்கமகா ஞானியரை நாடி
   மேதகு மாந்தர்களை யாவரும்
   முருகப் பெருமான் வழிபாடுசெய்து

9. செய்துமே என்றும் சேவகனேஎன
செருக்கிவா சுயநலமிலா நிலை
அய்யனே தா என வேண்டியே
ஆளுமைகள் சரணாகதி கண்டுவர
10. வருகவே இயற்கை பாதுகாப்பும்
வளர்ச்சித் திட்டங்களும் நிறைவேறி
பெருமை மிக்க பொருள்வளம் தொழில்வளம்
புண்ணியபலமும் கண்டு ஆளுமை சிறக்கும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 10ம் நாள் 25.12.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் மார்கழி மாதம் 17ம் நாள் 01.01.2023 ஞாயிற்றுக்கிழமை வரையில் உள்ள நிகழ்வுகள் :

எல்லையில்லாது தவங்களை செய்து வெற்றி கண்டிட்ட தவயோக ராசனே கணக்கிலடங்கா தர்மங்களைச் செய்து உலகின் தர்மபலம் பெருக்கிய தர்மராசனே இவ்வுலகை தர்மபலம் கொண்டும் தவபலம் கொண்டும் காத்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக ஆற்றலுடன் வந்துதித்த ஆறுமுக அரங்கமகா தேசிகனே அண்ணலே உம்மை போற்றியே அகத்திய மகரிஷி யானுமே இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் மார்கழி மாதம் 10ம் நாள் 25.12.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் மார்கழி மாதம் 17ம் நாள் 01.01.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டும் என்ற பொது நோக்கம் கொண்டு ஆட்சி பொறுப்பில் உள்ளவர்கள், அதிகாரிகள் என அனைவரும் மக்களை நோக்கி சாதாரணமான எளிமையான நிலைக்கு இறங்கி வந்து மக்களின் தேவை உணர்ந்து தயவுடன் ஆட்சி புரிந்திட சகலருக்கும் பயனளிக்கும் விதமாக பொதுவில் பாகுபாடு இன்றி ஆட்சி புரிய அந்த ஆட்சி வரலாறு போற்றும் ஆட்சியாக சிறந்து விளங்கும். தெய்வீக சக்திகளும் நல்லாட்சிக்கு துணையாக வந்து காக்கும். அந்த ஆட்சி தருமஞான நீதிமான்களின் ஆட்சி என இந்த உலகமே போற்றும் அதனால் இந்த இந்திய தேசமே பயனடையும் உலக நாடுகள் எல்லாம் இந்திய தேச நெறிகளை பின்பற்றி பயனடையும்.

இந்தவித ஆட்சிமுறையை அடைந்திட வேண்டுமாயின் ஆயிரம் ஆயிரம் பதவிகளையும், அதிகாரிகளையும் நியமித்து நெறிமுறைகள் வகுத்து செயல்பட்டாலும் ஆட்சி சிறப்பாக அமையாது அவர்கள் எல்லாம் ஞானமே வடிவாகிய சடாட்சர சொரூபனாகிய ஞானபண்டிதன் முருகப்பெருமான் திருவடிகளை வணங்கி தெய்வ வழிபாட்டுடன் கூடிய தயவான ஆட்சி செய்திட அடையலாம்.

ஆகவே தயவே வடிவான தர்மத்தின் நெறி சொல்லி தயவு வழிநடந்து தர்மங்களை செய்து தர்மவானாக நிற்கும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை அணுகி ஆசிபெற்று முருகப்பெருமானை வழிபடும் முறை அறிந்து வழிபாடுகளை செய்து வருவதுடன் பதவி இருந்தாலும் அதிகாரம் இருந்தாலும் நானும் மக்கள் சேவகனே எனும் சமதர்ம சகோதரத்துவ மனப்பான்மையுடன் நடந்து சுயநலமில்லா மனநிலை பெற்று மக்களை வழிநடத்த அருள்செய்யுங்கள் தாயே முருகா மனம் உருகி வேண்டுதல் செய்து முருகப்பெருமான் திருவடிகளிலே சரணாகதி அடைந்து செயல்பட செயல்பட இயற்கையும் அவர்களுக்கு துணையாக வந்து பாதுகாப்பளிக்கும். அரசின் வளர்ச்சி

திட்டங்களும் தடையின்றி நிறைவேறி பெருமை மிக்க பொருள் வளமும், பொருளாதாரமும் பெருகி தொழில் வளம் பெருகி நாடெங்கும் புண்ணிய பலம் பெருகி சிறப்பான ஆட்சி ஞான ஆட்சியாக உருவாகும் எனக்கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

**–சுபம்–**